CENTRE FOR POLICY ALTERNATIVES
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# பேராசிரியர் பெல்லன்வில விமலரதன தேரர் அவர்களது கருத்துரை தொடர்பான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளியீடு

2017 ஒக்டோபர் 28ஆம் திகதி சனிக்கிழமை "அத தெரண" மற்றும் "ஹிரு" போன்ற தொலைக்காட்சி சேவைகளின் இரவு நேர செய்தியின் போது, பேராசிரியர் பெல்லன்வில விமலரதன தேரரால் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தொடர்பில் கருத்தொன்றை தெரிவித்தமை ஒளிபரப்பானது. இரத்மலான தம்மிக்காராமய எனும் விகாரையில் இடம்பெற்ற புதிய அரசியலமைப்பு தொடர்பில் பிக்குகளை தெளிவூட்டும் மாநாட்டின் போது அரசியலமைப்பு நீதிமன்றத்தை தாபித்தல் மற்றும் புதிய அரசியலமைப்பிற்காக நிதி வழங்குதல் தொடர்பில் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து செயற்படுவதாக அவ்வுரையில் தெரிவிக்கப்பட்டது. அவ்வுரை தொடர்பான அறிக்கையொன்று நவம்பர் 1 ஆம் திகதி லங்காதீப பத்திரிகையில் 15 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. முதலில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் மூலம் பெல்லன்வில விமலரதன தேரரது உரையை முழுமையாக நிராகரிக்கின்றோம்.

இந்நாட்டு மக்களது கௌரவத்திற்கு உள்ளான பிக்கு ஒருவரான பெல்லன்வில விமலரதன தேரர் துரதிஸ்டவசமாக புதிய அரசியலமைப்பு செயற்பாட்டிற்கு எதிராக செயற்படுபவர்களுடன் இணைந்து செயற்படுகின்றமையை காணமுடிகின்றது. அரசியலமைப்புச் சீர்திருத்த செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குபவர்கள் தேசத் துரோகிகள் என பெயரிடப்படுவதுடன், அரசியலமைப்பு உருவாக்கச் செயற்பாட்டுடன் தொடர்புபடுபவர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுவதோடு, புதிய அரசியலமைப்பு பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படுமாயின், பாராளுமன்றத்திற்கு வெடிகுண்டு வைக்க வேண்டுமென அவ் எதிர் குழுக்களில் ஒருசிலர் தெரிவிக்கின்றனர். அவ்வாறான சூழ்நிலையில் பெல்லன்வில விமலரதன தேரரது கருத்து தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வெறுப்படைவதுடன் மனம் வருந்துகின்றது.

மேலும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் தொடர்பில் குறிப்பிட்ட செயற்பாடுகளுக்குரிய எந்தவொரு சாட்சிகளும் கௌரவ தேரரினால் முன்வைக்கப்படவில்லை.

கௌரவ தேரரினால் தெரிவிக்கப்பட்ட கருத்து பொறுப்பற்ற, நாசத்தை ஏற்படுத்தக்கூடிய கருத்தென மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் காண்கின்றது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் 2008ஆம் ஆண்டில் கறுப்பு ஜூலைக்கு 25 வருடங்கள் பூர்த்தியாவதையொட்டி "மீண்டும் ஒரு கறுப்பு ஜூலை வேண்டாம்" எனும் பொதுமக்களை தெளிவூட்டும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இலங்கையின் அனைத்து பிரஜைகளுக்கிடையில் அமைதியான சகவாழ்வு மற்றும் அகிம்சை வழியில் எனும் தலைப்புக்களில் நடத்தப்பட்ட அந் நிகழ்ச்சிகளுக்கு கௌரவ ஒத்துழைப்பை வழங்கிய தேரரால் இவ்வாறான கருத்தொன்றை தெரிவிப்பது குறித்து அதிருப்தி அடைகின்றோம்.

இலங்கையின் நல்லாட்சியை மற்றும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் 1996ஆம் ஆண்டு தொடக்கம் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திவருவதுடன், புதிய அரசியலமைப்பொன்றிற்கான எதிர்பார்ப்புடன் பரந்த பொதுமக்கள் கலந்துரையாடல் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு நிகழ்ச்சிகளை மற்றும் ஆய்வுகளை நடத்தி வருகின்றது.

தகவல்களை சீர்குலைத்தல், வைராக்கிய கருத்துரைகள் மற்றும் பகைமையை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகளின்றி அரசியலமைப்புக் கலந்துரையாடலொன்றை ஏற்படுத்த முடியுமென மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நம்பிக்கை கொள்கின்றது.

இலங்கைக்கான புதிய அரசியலமைப்பொன்றின் தேவையை நாங்கள் ஏற்றுக்கொள்வதுடன், அது அனைத்து பிரஜைகளினது அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய, பாதிப்பு ஏற்படுத்தாத மற்றும் பகைமையை வளர்க்கும் விடயங்களை முற்றிலும் நிராகரிக்கும் அரசியலமைப்பொன்றாதல் வேண்டும்.

அனைத்து பிரஜைகள், மதத்தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகள் புதிய அரசியலமைப்பு கலந்துரையாடலை வளமான மற்றும் பொறுப்புக்கூறும் வகையில் நிபுணத்துவத்துடன் முன்னெடுத்து செல்லுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

Centre for Policy Alternatives (Guarantee) Limited | 6/5, Layards Road, Colombo 05, Sri Lanka
Tel: +94 11 2081384-6, 5552746, 5552748 | Fax: +94 11 2081388 | Email: cpa@cpalanka.org | Web: www.cpalanka.org